# மக்கள் சாசனம் - 2011

## தமிழ்நாடு வனத்துறை

வனங்கள், பல்வேறு சூழலமைப்புகளைக் கொண்டு, சுற்றுச்சூழலை பாதுகாக்க மிக முக்கிய பங்காற்றுகின்றன. வனம் சார்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு கணிசமான வருவாயினையும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளையும் வனங்கள் வழங்கி வருகின்றன. அவை, பலதரப்பட்ட வனவிளைப்பொருட்களையும், சேவைகளையும் நல்கி வருகின்றன. வனங்கள் தரம் குன்றுவதால், பல்வேறு வாழ்வாதார அமைப்புகளான நீர்வளம், விவசாயம், உயிர்ப்பன்மை மற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றின் மீது கடும் தாக்கம் ஏற்படுகின்றன. பழங்குடியினத்தவர் உள்ளடக்கிய கிராமப்புற சமுதாயத்தின் பெரும் பகுதியினரின் வாழ்வாதாரம் வனங்களை சார்ந்தே உள்ளது.. மனித சமுதாயத்தின் வாழ்வாதார பாதுகாப்பிற்காக வனங்களை நிலைமாறாத் தன்மையுடன் மேலாண்மை செய்வது இன்றியமையாததாகும். வனத்துறை மக்களுக்கு ஆற்றும் பல்வேறுப்பட்ட பணிகளில் சில இனங்கள் கீழ்வருமாறு :–

| வரிசை எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| 1 | தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு திட்டம் (சவுக்கு மற்றும் தடி மரங்கள் வளர்த்தல்) | பயன் தரும் தடி மரங்களை தரிசு நிலங்களில் உற்பத்தி செய்து அவற்றை வளமாக்குதல். தொகுப்பு நடவு செய்யும் விவசாய நிலங்களின் உரிமையாளருக்கு முதலாம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு ரூ. 1000/– ஊக்கத்தொகையாக வழங்கப்படும் | சிறு மற்றும் குறு விவசாயிகள் | நில உரிமை பத்திரம், பட்டா, சிட்டா அடங்கல் | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 2 | கண்மாய் பகுதி தோட்டங்கள் (தோட்டங்கள் எழுப்புதல்) | மாநிலத்தின் எரிபொருள், தீவனம் மற்றும் சிறு மரத்தேவையை நிறைவு செய்தல் கருவேல் மரதோட்டங்களை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் 75 விழுக்காட்டினை கிராம மேம்பாட்டு பணிகளுக்காக ஊராட்சிகளுக்கு பங்கு தொகையாக வழங்குதல். | உள்ளுர் கிராம ஊராட்சி உறுப்பினர்கள் | – | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 3 | கல்வி நிறுவனங்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்குதல் | காற்று மற்றும் ஒலி மாசுக்களின் எதிர்விளைவை குறைத்தல் | பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் போன்றவை | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்கவேண்டும் | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | மேய்ச்சல்<br>(அரசாணை நிலை. எண். 47 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (வனம் 13) நாள் 03.03.2000) | கால்நடைகள் மேய்ச்சல் | பொதுமக்கள் | கட்டண விபரம்<br>வெள்ளாடு– அனுமதி இல்லை<br><br>செம்மறியாடு – அனுமதி இலவசம்<br><br>காளை ஒன்றுக்கு– ரூ.4/– வீதம்.<br><br>எருமை ஒன்றுக்கு –ரூ. 6/– வீதம்<br><br>கழுதை / குதிரை ஒன்றுக்கு–ரூ. 10/– வீதம்<br><br>யானை ஒன்றுக்கு – ரூ. 100/– வீதம். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 5 | அட்டவணைப்படுத்தப்பட்ட தடி மரங்களை கையிருப்பு வைக்க | 0.5 கன மீட்டருக்கு குறைவான அளவு தடிமரங்கள் இருப்பில் வைத்துக்கொள்ளலாம் | பொதுமக்கள் | – | – | – |
| | | 0.5 கன மீட்டருக்கு அதிகமான தடிமரங்கள் | பொதுமக்கள் | இருப்பில் வைத்துக்கொள்ள உரிமம் பெற தோற்ற சான்றிதழின் அசலில் விண்ணப்பித்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 6 | தடிமரங்களை இடமாற்றம் செய்தல் | அறுவடை செய்யப்பட்ட தடிமரங்கள் இடமாற்றம் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் விண்ணப்பம் செய்யலாம். போக்குவரத்து செய்ய கட்டணம் கருவேல் மரங்களுக்கு ஒரு வண்டி சுமை ரூ.10/. ஒரு லாரி சுமை ரூ.50/. கருவேல்தடி மற்றும் இதரவகைக்கு ரூ.100/. | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | சந்தனமரங்கள் இருப்பு வைத்தல் | 5 கிலோவிற்கு அதிகமாக சந்தனமரங்களை சொந்த உபயோகத்திற்காக வைத்துக்கொள்ளுதல் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் படிவம் 1 அனுமதி உரிய கட்டணத்தொகை மற்றும் அசல் தோற்றச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டும் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 8 | சந்தன மர விற்பனை | தனிநபர் சந்தன மரங்களை வாங்குதல் | பொதுமக்கள் | அதிகபட்சமாக 5 கிலோ வரை தனிநபர் ஒன்றுக்கு வழங்கப்படும் | மாவட்ட வன அலுவலர் | மாவட்ட வன அலுவலர் |
| | | | | அதிகபட்சமாக 10 கிலோ வரை தனிநபர் ஒன்றுக்கு வழங்கப்படும். | வனப்பாதுகாவலர் | வனப்பாதுகாவலர் |
| | | | | அதிகபட்சமாக 100 கிலோ வரை தனிநபர் ஒன்றுக்கு வழங்கப்படும். | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் |
| | | | | அதிகபட்சமாக 500 கிலோ வரை கோவில்களுக்கு வழங்கப்படும். | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் | தலைமை வனப்பாதுகாவலர் |
| 9 | சந்தனமர இடமாற்றம் செய்தல் | சந்தனமரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் மாநிலத்திற்குள் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடமாற்றம் செய்தல் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் படிவம் 1,2 மற்றும் 3 அனுமதி சீட்டு பெற உரிய கட்டணம் மற்றும் அசல் தோற்ற சான்றிதமுடன் விண்ணப்பிக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | மாவட்ட வன அலுவலர் |
| 10 | கூட்டு வன நிர்வாகம் செயல்படுத்தும் நீர்பிடிப்பு பகுதிகளிலுள்ள சிறுவனப்பொருட்கள் | தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டக் கிராமங்களிலுள்ள வனப் பகுதிகளில் உள்ள சிறுவன பொருட்கள் சேகரம் செய்தல். | கிராம வனக்குழுக்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகையில் 25 விழுக்காடு கிராம வன வளர்ச்சி நிதியில் சேர்க்கப்படுகிறது. மீதத்தொகை கிராம வனக்குழு உறுப்பினர்களுக்கு | – | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பகிர்ந்து வழங்கப்படுகிறது. கிராம வனக்குழு நிர்ணயித்த நியாயவிலையின் அடிப்படையில் சிறுவன பொருட்களை கிராம பெண் குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (அரசாணை எண்.286, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை நாள் 25.09.98) | | | |
| 11 | வனநிர்வாக நீர்பிரிப்பு பகுதிகளிலுள்ள விறகு மற்றும் எரிப்பொருள் சேகரம் | தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்ட கிராமங்களில் இலவசமாக விறகு மற்றும் எரிபொருள் சேகரம் செய்யலாம். கட்டணம் ஏதுமில்லை. | கிராம வனக்குழுக்களிலுள்ள, நிலமில்லாதவர்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தவர் | – | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 12 | தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் | தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்டத்தை சார்ந்த கிராமங்களில் உள்ள மக்கள் இலவசமாக தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் சேகரம் செய்ய அனுமதிக்கப்படுவர் | கிராம வனக்குழு உறுப்பினர்கள் | – | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 13 | சிறுவனப்பொருட்கள் பழங்குடியினருக்கு வழங்குதல் (அரசாணை எண்.79, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை நாள் 29.04.2003) | பழங்குடி மக்களுக்கு இலவசம் | பழங்குடியினத்தவர் | – | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | படப்பிடிப்பு | முக்கியமில்லாத காப்புகாடு பகுதிகளில் படப்பிடிப்புகள் | மாணவர்கள் ஆவணப்படம், கலை மற்றும் பண்பாடு திரைப்படங்கள் எடுப்பதற்கு சுற்றுலாத்துறை மற்றும் திரைப்படத் துறைமூலம் அனுகவேண்டும். | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்க வேண்டும் | தடையில்லா சான்று பெற முதன்மை தலைமை வனப்பாதுகாவலரிடம் விண்ணப்பிக்கப்படவேண்டும். பாதுக்கப்பட்ட வனப்பகுதிகளுக்கு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளரின் அனுமதி பெற வேண்டும். | செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர் |
| 15 | வன உயிரினங்கள் வைத்திருத்தல் | எந்த பொது மக்களும் வன உயிரினங்கள் மீது உரிமை கோர முடியாது | – | – | – | – |
| 16 | வன உயிரின இடமாற்றம் (அரசாணை எண்.447, சுற்றுப்புறம் மற்றும் வனத்(வனம் 7) துறை நாள் 19.07.1991) | எந்த ஒரு நபரும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளரின் முன் அனுமதியின்றி எந்த ஒரு வன உயிரினத்தையும் மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திற்கு வெளியே இடமாற்றம் செய்ய இயலாது. | பொது மக்கள் | நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளர் |
| 17 | வன உயிரின வேட்டை | வன உயிரின வேட்டை முழுவதுமாக தடைசெய்யப்பட்டுள்ளது. | – | – | – | – |
| 18 | வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குதல் (அரசாணை நிலை எண்.ப்98, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை நாள் 17.08.2011) | 1. மனித உயிரிழப்பு/ நிரந்தர ஊனம் ரூ.3,00,000/– 2. பலத்த காயம் ரூ.30,000/– 3. பயிர்ச்சேதம் ஏக்கருக்கு ரூ.25,000/– | பொதுமக்கள் | முதல் தகவல் அறிக்கை, வாரிசு சான்றிதழ், மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | தொடர்புடைய மண்டல வனப்பாதுகாவலர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அல்லது உண்மை மதிப்பு இதில் எதுகுறைவோ அது.<br>தென்னைமரச் சேதம் ஒன்றுக்கு ரூ. 500/–<br>4. ஓடு, கான்கிரீட், கூரைவேய்ந்த வீடுகள் சேதம்<br>குடியிருப்பின் முழுமையான சேதம்<br>உறுதியான குடியிருப்பு கட்டிட சேதம் ரூ. 35,000/– குடியிருப்பு ஒன்றுக்கு<br>உறுதியற்ற குடியிருப்பு கட்டிட சேதம் ரூ. 10,000/– குடியிருப்பு ஒன்றுக்கு<br>குடியிருப்பிள் அதிக அளவிலான சேதம்<br>உறுதியான குடியிருப்பு கட்டிட சேதம் ரூ. 5,000/– குடியிருப்பு ஒன்றுக்கு<br>உறுதியற்ற குடியிருப்பு கட்டிட சேதம் ரூ. | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2,500/– குடியிருப்பு ஒன்றுக்கு<br>குடியிருப்பின பகுதி சேதம்<br>குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 1500/–<br>**5.** வாகனம், மாடு மற்றும் இதர கால்நடை இழப்புகளுக்கு:<br>கறவை மாடு ஒன்றுக்கு ரூ.10,000/–<br>எருது ஒன்றுக்கு ரூ.10,000/–<br>வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 2000/–<br>செம்மறியாடு ஒன்றுக்கு ரூ.1500/–<br>வீட்டுப்பறவைகள் ஒன்றுக்கு ரூ. 100/–<br>பன்றி ஒன்றுக்கு ரூ.1000/– அல்லது உண்மை மதிப்பில் எது குறைவோ அது<br>**6.** துணி மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் சேதாரம் | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ.2000/– அல்லது உண்மை மதிப்பில் எது குறைவோ அது<br>7. கடை சேதாரம் ரூ. 4.000/–<br><br>8. பாசன மற்றும் குடிநீர் கிணறு மின்மோட்டார் சேதம் ரூ. 2000/–<br>9. வாகன சேதத்திற்கான இழப்பீடு தொகை ரூ.2.000/– | | | | |
| 19 | வன உயிரின சாரணலயத்தை பார்வையிடுதல் | வன உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | சுற்றுலா பயணிகள், மாணவர்கள், இந்திய குடியுரிமை பெற்றவர்கள் | – | சம்பந்தப்பட்ட வன உயிரின காப்பாளர் / மாவட்ட வன அலுவலர் | – |
| 20 | ஆராய்ச்சி கல்வி | மாணவர்கள் மேற்கொள்ளும் வனஆராய்ச்சி கல்வி | மாணவர்கள், வன ஆராய்ச்சியாளர்கள் முதலானோர் | வெள்ளைத்தாளில் விண்ணப்பம் | – | வனப்பகுதிக்களுக்கு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்ளுக்கு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளர். |

வனத்துறை பொது மக்களுக்கு ஆற்றும் பல்வேறு பணிகளை வழங்கி வருகையில், கீழ்காணும் சட்ட விதிகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் பெதுமக்கள் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. தடிமரம் போக்குவரத்து

**2.1.** தமிழ்நாட்டில் மரங்களை வெட்டுவதும், வெட்டிய மரங்களைக் கொண்டு செல்வதும் கீழ்காணும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மூலம் முறைப்படுத்தப்படுகின்றன.

1) தமிழ்நாடு வனச்சட்டம் 1882

2) தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச்சட்டம், 1949.

3) தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955.

4) தமிழ்நாடு ஈட்டி (Rosewood) மரங்கள் (பாதுகாப்பு) சட்டம், 1994.

5) தமிழ்நாடு மரப்போக்குவரத்து விதிகள், 1968.

6) தமிழ்நாடு சந்தன மரப்போக்குவரத்து விதிகள், 1967.

7) தமிழ்நாடு சந்தனமர இருப்பு வைத்தல் விதிகள், 1970.

8) தமிழ்நாடு பட்டா நில சந்தன மரங்கள் விதிகள் 2008.

9) தமிழ்நாடு தொழிற்சாலை / வணிக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்களுக்கான கணக்குகள் பராமரிப்பு விதிகள் 1988.

**2.2.** தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில், எந்தவொரு மரத்தினையும் வெட்ட அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்ட குழுவிடம் முன் அனுமதி பெறவேண்டும். இப்பகுதிகளில் மரங்களை வெட்டுவதற்கான மனுக்கள் மீது குழு முடிவு செய்யும். இக்குழு தேவைக்கேற்ப, அவ்வப்போது அல்லது இரண்டு மாதங்களுக்கு மிகாத இடைவெளியில் கூடி முடிவு செய்யும்.

**2.3.** உச்சநீதிமன்ற வழக்கு எண். 202/95 ல், 12.12.1996 நாளிட்ட இடைக்கால ஆணையின் படி வனப்பகுதிகளில் இயற்கையாக வளரும் மரங்களை வெட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது.

**2.4.** தமிழ்நாடு வனச்சட்டம்1882ன் படி பின்வரும் மர இனங்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

1) கருங்காலி ( எபோனி),

2) செம்மரம்

3) ஈட்டி மரம்

4) சந்தனமரம்

5) தேக்கு மரம்

**2.5.** தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம்–1994ன் படி, தரிசு நிலங்கள் அல்லது மரங்கள் மற்றும் தாவரங்கள் அமைந்துள்ள சமுதாய நிலங்கள், அரசினால் வனம் என்று அறிவிக்கப்பட்ட சாலை, மேய்ச்சல் நிலங்கள் மற்றும் எவ்வகையான நிலங்கள் உள்ளடக்கிய வனப்பகுதிகளிலிருந்து காய்ந்த மற்றும் காற்றில் விழுந்த ஈட்டி மரத்தை வெட்டி அப்புறப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

**2.6.** தமிழ்நாட்டில் தடி மரங்களை, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வனத் துறையின் படிவம் 2 அனுமதிச்சீட்டு பெற்ற பின்னரே கொண்டு செல்லுதல் வேண்டும். இவ்வாறு பெறப்படும் அனுமதிச்சீட்டின் காலஅளவு, அனுமதிச் சீட்டு வழங்கு அலுவலராலேயே அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். மாநகர மற்றும் நகராட்சி பகுதிக்குள் மரங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்ல அனுமதிச் சீட்டு தேவையில்லை. கீழ்க்கண்ட மரவகைகள் கொண்டு செல்ல, தமிழ்நாடு மரப்போக்குவரத்து விதிகளின் படி, அனுமதி தேவையில்லை.

1) சிறிய அளவிலான விறகு மற்றும் விறகு தலைச்சுமை அளவு மூங்கில்

2) வீட்டு உபயோகத்திற்காக மரக்கிடங்கிலிருந்து வாங்கப்படும் விறகு மரங்கள்

தமிழ்நாடு மரப்போக்குவரத்து விதிகளின்படி, அனுமதிச்சீட்டு பெற விலக்களிக்கப்பட்ட மரவகைகளின் பெயர்களங்களடங்கிய பட்டியல் **www.forests.tn.nic.in** என்ற வனத்துறையின் இணையதள முகவரியில் பொதுமக்கள் அறிந்து கொள்ளும்வகையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.7.** தேக்கு மற்றும் ஈட்டி மரங்களை கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை தாலுக்காவிற்கு உட்பட்ட மாநிலத்தின் பகுதியில் இருந்து வெட்டி எடுத்துச்செல்ல, உரிமைத்தொகை வழங்கத்தேவையில்லை.

வனச்சாலைகளை பொதுமக்கள் தடையின்றி உபயோகிப்பதற்கு ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வந்த அனுமதி கட்டணங்கள் வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

**2.8. சந்தன மர விற்பனை, உடைமை மற்றும் போக்குவரத்து**

சந்தன மரங்கள் பெரும்பாலும், தமிழ்நாட்டில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் வடகிழக்கு பகுதியில் வேலூர் மாவட்டத்தில் இருந்து மேற்கே நீலகிரி மாவட்டம் வரையில், உலர்இலையுதிர் காடுகளில் அதிக அளவில் வளருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, காய்ந்த மற்றும் காய்கின்ற நிலையிலுள்ள சந்தன மரங்கள் மட்டும் பெயர்த்தெடுக்கப்பட்டு, கிடங்கிற்கு கொண்டு வரப்பட்டு, மேல் துலக்கம் மற்றும் இறுதி துலக்கம் செய்யப்படுகின்றன. இறுதி துலக்கம் செய்யப்பட்ட சந்தனக்கட்டைகள், பொது ஏலத்தில் திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் கிடங்குகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் விற்கப்படுகின்றன. இந்த ஏலங்களில் கலந்துக்கொள்ள விருப்பம் உள்ள நபர்கள் / நிறுவனம் தங்கள் பெயர்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

நியாயமான உள்ளூர் தேவைகளுக்காக, சில்லறை விலையில் கீழ்க்கண்ட அலுவலர்களால் சந்தனக் கட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

அ) மாவட்ட வன அலுவலர் – பொதுமக்களுக்கு 5 கிலோ வரை விற்பனை

ஆ) வனப்பாதுகாவலர் – 1) பொதுமக்களுக்கு 10 கிலோ வரை விற்பனை
– 2) கோவில் உபயோகத்திற்கு 100 கிலோ வரை

இ) தலைமை வனப்பாதுகாவலர் – 1) பொதுமக்களுக்கு 50 கிலோ வரை விற்பனை
– 2) கோவில்களின் உபயோகத்திற்கு 500கிலோ வரை

சில்லறை விற்பனைக்கான விலை வருடந்தோறும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் நிர்ணயம் செய்து அறிவிக்கப்படுகிறது. அவ்விலையின் அடிப்படையில் சில்லறை விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் சந்தன மர இருப்பு வைத்தல் மற்றும் போக்குவரத்து தமிழ்நாடு சந்தன மர போக்குவரத்து விதி, 1967 மற்றும் தமிழ்நாடு சந்தன மர இருப்பு வைத்தல் விதி–1970ன் கீழ் முறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு சந்தன மர இருப்பு வைத்தல் விதி, 1970 விதி 3(1)ன் படி, 5 கிலோவுக்கு அதிகமாக ஒரு நபர் சந்தனக் கட்டைகளை இருப்பில் வைத்துக் கொள்ள விரும்பினால், படிவம்–1 ல் மனு செய்து அதற்கான தொகையைச் செலுத்தியப்பின் சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் விதி 4, துணை விதி (7)ன் கீழ் அனுமதி வழங்குவார்.

தமிழ்நாடு சந்தன மரப்போக்குவரத்து விதி, 1967ன்படி எந்த ஒரு நபரும் சந்தன மரங்களை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யவோ அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்லவோ விதி–4ல் கண்ட படிவம்–1 அல்லது படிவம்–2ல் அனுமதி சீட்டு அல்லது விதி–6ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் 3 வழி அனுமதிச் சீட்டு பெற்றே சந்தனக்கட்டைகளை இடமாற்றம் செய்யலாம். மேற்படி சந்தனக்கட்டைகளுக்கு விதி–7ன் படி அரசு முத்திரை பதிக்கப்பட்டு, பின் அனுமதிக்கப்படும்.

இது போன்ற அனுமதி படிவங்கள், வனத்துறையால் உரிய கட்டணத்தினை பெற்று வழங்கப்படுகின்றன.

**2.9. பட்டாநிலங்களில் சந்தன மரங்கள்**

பட்டா நிலங்களின் சொந்தக்காரராக, வாடகையாளராக, ஒப்பந்தக்காரராக எவராலும் வளர்க்கப்படும் சந்தன மரத்திற்கு அவரே சொந்தக்காரராவார். பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சந்தன மரங்களை அரசுக்கே விற்பனை செய்யவேண்டும். சொந்த நிலங்களில் சந்தன மரங்களை அதிக அளவில் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்கள் விதியினை அரசு அறிவிக்கை செய்துள்ளது.

**2.10 தடி மர விற்பனை**

தமிழ்நாட்டில் தடிமரங்களின் தேவைக்காக இயற்கை வனங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுவதில்லை. எனினும், காற்றில் விழுந்த மரங்கள், பட்டுப்போய் விழுந்த மரங்கள் போன்றவை வன மர கிடங்கிற்கு அனுப்பப்பட்டு, பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், விழுப்புரம் மாவட்டங்களில் கால்வாய்க்கரைகளில் வனத்துறையின் மூலமாக எழுப்பப்பட்டு, 30 ஆண்டுகள் நிறைவடைந்த தேக்கு தோட்டங்களில் உள்ள தேக்கு மரங்கள் வெட்டப்பட்டு, ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. கொடைக்கானல் கோட்டம் மற்றும் நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் எழுப்பப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த கூழ் மரத்தோட்டங்கள், கூழ்மர தொழிற்சாலைகளுக்கு அந்தந்த வனக் கோட்டத்தின் அங்கிகரிக்கப்பட்ட வனச்செயல் திட்டத்தில் கண்ட வரைமுறைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2.11. வெளிமாநிலங்களுக்கு தடிமரங்கள் எடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்குதல்**

அரசாணை எண்.43, சுற்றுப்புறம் மற்றும் வனத்(வனம்–4)துறை, நாள்.22.02.2003ல் வெளிமாநிலங்களுக்கு தடிமரங்கள் எடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. எனவே எந்தவொரு நபரும் தமிழ்நாடு தடிமர போக்குவரத்து விதிகளின்படி உரிய அனுமதிச்சீட்டு பெற்று தடிமரங்களை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.

**3. வனப்பாதுகாப்புச்சட்டம்–1980**

பயனீட்டாளர் நிறுவனம் தங்களது விண்ணப்பங்களை அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட வன அலுவலர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்திற்கான முறையான படிவம் மற்றும் உள்ளிட்ட விரிவான நெறிமுறைகளை அனைத்து மாவட்ட வன அலுவலர்களிடமிருந்தோ அல்லது 1980 ஆம் ஆண்டைய வனப்பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஒருங்கினைப்பு அலுவலராக உள்ள சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் (வனப்பாதுகாப்புச்சட்டம்) கட்டுப்பாட்டில் உள்ள தொழில் நுட்பப் பிரிவிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். மாவட்ட வன அலுவலரிடமிருந்து வனப்பாதுகாவலர் மூலமாக பெறப்படும் இவ்வாறான விண்ணப்பங்கள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் மூலமாக அரசுக்கு மேலனுப்பப்படும்.

40 எக்டேர் வரையிலான வன நிலங்களை மாற்றுவதற்கு மாநில அரசுகள் விண்ணப்பங்களை பெங்களூரிலுள்ள மண்டல அலுவலகத்திற்கும், 40 எக்டேருக்கு மேலான வன நில மாற்றத்திற்கான கருத்துரு மாநில அரசினால் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்துக்கும் மேலனுப்பப்படும். நிலஆக்கிரமிப்பு மற்றும் சுரங்கத்தினை முறைப்படுத்தும் கருத்துருக்களைத் தவிர 5 எக்டேர் வரையிலான கருத்துருக்களை அங்கீகரிக்க மத்திய அரசின் மண்டல அலுவலகங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வனப்பாதுகாப்புச்சட்ட நெறிமுறைகளின் படி வனப்பாதுகாப்பு சட்டம் 1980 ன் கீழ் முழுமையான நிலையில் பெறப்படும் கருத்துருக்களுக்கு பெறப்பட்ட நாளிலிருந்து குறிப்பிட்ட கால அளவான 180 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

**4. வெளிப்படையான செயல்பாடு**

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005**

ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர்த்து நாடு முழுவதும் உள்ள பொது அதிகாரிகள் பொறுப்பில் இருக்கும் தகவல்களை பெறுவதற்கான அடிப்படை உரிமையை குடிமக்கள் பெறும் பொருட்டு பாராளுமன்றத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு, அதிகாரம் பெற்ற அலுவலர்களின் செயல்பாடுகளில் ஒரு வெளிப்படையான நிலையை கொண்டுவந்து, அரசும், அரசின் அங்கங்களும் பொதுமக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பை இச்சட்டம் தந்துள்ளது. இச்சட்டத்தின் படி, பொதுமக்களுக்கு நடைமுறையில் உள்ள தகவல்களை வழங்கவும், கோரிக்கையின் அடிப்படையில் தகவல்களை வழங்கவும் அலுவலகங்கள் கடமைப்பட்டுள்ளன. இச்சட்டம் போதிய காரணமின்றி பொது அதிகாரிகள் வழங்க மறுக்கும் தகவல்கள் குறித்த புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள இருநிலை மேல்முறையீடு வழிமுறைகளை வழங்குகிறது. இச்சட்டம் 1923 ஆம் ஆண்டைய அலுவலக ரகசிய சட்டம், பிற சட்டங்கள் மற்றும் அரசு ஆணைகளின் படி பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதில் உள்ள கட்டுப்பாட்டினை நீக்கும் அதிகாரம் படைத்தது.

வனத்துறையில் கீழ்க்கண்டவாறு பொது தகவல் அலுவலர்கள் / மேல்முறையீட்டு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| பதவி | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் | வனப்பாதுகாவலர் அலுவலகம் | மாவட்ட வன அலுவலகம் / வன உயிரின காப்பாளர் அலுவலகம் மற்றும் பிற |
|---|---|---|---|
| பொது தகவல் அலுவலர் | தலைமை வனப்பாதுகாவலர் (விளம்பரம்) | கண்காணிப்பாளர் | கண்காணிப்பாளர் |
| மேல்முறையீட்டு அலுவலர் | கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனப்பாதுகாப்பு சட்டம்) | வனப்பாதுகாவலர் | மாவட்ட வன அலுவலர் |

**கால வரையறை : பிரிவு – 7**

- விண்ணப்பம் அளித்த நாளிலிருந்து – 30 நாட்கள்.
- ஒரு தனிநபரின் வாழ்க்கை மற்றும் சுதந்திரம் குறித்த தகவல் எனில்– 48 மணி நேரம்.
- கட்டணத்தை கணக்கீடு செய்யும் காலம் மற்றும் விண்ணப்பதாரருக்கு தெரியப் படுத்துதல் 30 நாட்கள் கால அளவிலிருந்து நீக்கப்படும்.

**கட்டணம்**

இச்சட்டத்தின் 7–ஆவது பிரிவு உட்பிரிவு (1)ன் படி, தகவல் வழங்க கட்டணம் உரிய ரசீதுகள் அல்லது கேட்போர் காசோலை அல்லது வங்கிக்காசோலையின் மூலம் வசூலிக்கப்பட்டு, பொது அலுவலர் நிர்ணயிக்கும் பின்வரும் விலைவிகிதங்களில் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

- அச்சடிக்கப்பட்ட அல்லது நகல் எடுக்கப்பட்ட ஒரு பக்கத்திற்கு ரூ. 2 வீதம் (A4 அல்லது A3 அளவு தாள்) ;
- பெரிய அளவு தாளில் எடுக்கப்பட்ட நகலுக்கு உள்ள படியான விலை ;
- மாதிரிகளுக்கான உள்ளபடியான விலை ;
- ஆவணங்களை ஆய்வு செய்ய முதல் ஒரு மணிநேரத்திற்கு கட்டணம் ஒன்றுமில்லை மற்றும் அதற்குப்பின் ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் ரூ.5 கட்டணமாக வசூலிக்கப்படும்.

இச்சட்டத்தின் 7–ஆவது பிரிவு உட்பிரிவு (5)ன் படி, தகவல் வழங்க கட்டணம் உரிய ரசீதுகள் அல்லது கேட்போர் காசோலை அல்லது வங்கிக் காசோலையின் மூலம் வசூலிக்கப்பட்டு, பொது அலுவலர் நிர்ணயிக்கும் பின்வரும் விலைவிகிதங்களில் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

- தகவல்களை பிளாப்பியில் வழங்க பிளாப்பிக்கு ரூ.5 வீதம் ;
- தகவல்களை அச்சடிக்கப்பட்ட வடிவில் வழங்க வெளியீட்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட விலை.

**திட்ட செயல்பாடுகளுக்கு விளம்பரம்**

திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து பகுதிகளில் திட்ட மதிப்பீடு, திட்ட முன்னேற்றம் போன்ற விவரங்களை தெரிவிக்கும் விளம்பர பலகைகள் எழுப்பப்படுகின்றன.

**நேரடி பொது ஏலம்**

தடிமரம், சிறுவனப்பொருட்கள், விறகு மரம், சந்தனமரம் போன்றவைகளின் விற்பனைக்கு பொது ஏலம் மூலம் நடத்தப்பட்டு அனைத்து வகைகளிலும் வெளிப்படையான நடவடிக்கை கடைபிடிக்கப்படுகிறது.

**5. குறை தீர்க்கும் செயல்முறை**

**குறை தீர்க்கும் நாள்**

பொது மக்களின் குறைகளைத் தீர்க்க வனத்துறையில் கீழ்க்கண்ட நாட்களில் குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வனச்சரக அலுவலகம் | .. | 15 நாட்களுக்கு ஒரு முறை |
| 2. | மாவட்ட வன அலுவலகம் | .. | மாதம் ஒருமுறை |
| 3. | வனப்பாதுகாவலர் அலுவலகம் | .. | இரண்டு மாதத்திற்கு ஒரு முறை |
| 4. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் | .. | மூன்று மாதத்திற்கு ஒருமுறை |

**குறை தீர்க்கும் பிரிவு**

குறைகளைத் தீர்ப்பதற்கென குறைதீர்க்கும் பிரிவு மாவட்ட / மண்டல / தலைமை அலுவலக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார் மனுக்கள்**

முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் புகார்மனுக்கள்/ குறைகள் மீது தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமை வனப்பாதுகாவலர், மனித வள மேம்பாடு தொடர் நடவடிக்கை எடுத்து ஆய்வு செய்கிறார். தலைமை வனப்பாதுகாவலர், மனித வள மேம்பாடு முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார்மனுக்கள் குறித்த செயல்பாட்டிற்கு ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வனத்துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் வரும் பார்வையாளர்களுக்கு உரிய மதிப்பு வழங்கப்பட்டு, அவர்களது குறைகளை பொறுமையாக கேட்டறிந்து பிரச்சனைகளை தீர்க்க வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தேவைகள் நிவர்த்தி செய்யப்படாத பட்சத்தில், பயனாளிகள் / பொதுமக்கள் துறைத் தலைவரை அணுக வேண்டும்.

**6. வனத்துறை இணையதளம்**

வனத்துறை தொடர்பான தகவல்களை வனத்துறைக்கென அமைக்கப்பட்டுள்ள http://www.forest.tn.nic.in/ என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**கே.டி. பச்சைமால்**
**அமைச்சர் – வனம்**